Under Section 173 BNSS

# FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

G 8318783

1. District : Chennai PS: Vigilance & Anti Corruption Year: 2026 FIR No.: 02 Date: 22.06.202
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு முத.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: Act 1988 as amended in Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: 2018 Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : Date to : 16.06.2026 to
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை 20.06.2026
Time Period : Time from : Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : 22.06.2026 Time : 10.10 hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
(c) General Diary Reference : Entry No(s) Time : on 22.06.2026 at 10.50
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம் registration of FIR

4. Type of Information : Written/ Oral / Electronic form : Typed Complaint.
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: 13 K.M South
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : (b) Address : TNEB, 144, NPKR Malagai, Mount Ro
முறைக் காவல் எண் முகவரி Anna salai, chennai - 600002.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name: Tr. P. Balasubramanian
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்
(b) Father's/ Husband's Name : Tr. Paramasivan
தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 53/2026 (d) Nationality : Indian (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : Public Servant (g) Address : 104B, Arul selvan street, Devaki Nagar, Kunrathur Chennai - 69.
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Tr. Balaji, Assistant, TNEB (Hqrs), Chennai - 2

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்) —

10 Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11 Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12 FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) —

Enclosed separate sheet

13 Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

22/6/26

14 Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

22/06/2026

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15 Date & Time of despatch to the court: 22/06/2026 at 11.30hrs.
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும். நேரமும்

Name: பெயர் P-I. JOSLINE MARY
Rank: நிலை Inspector of Police No. எண்
CC-I, VE & AC, Alandur
Chennai - 600016

**(Contents of the F.I.R. in CC-1, V & AC, Cr.No. 02/2026/AC/CC-I, U/s. 7 of Prevention of Corruption (Amendment), Act –2018, continues.....)**

**பணிந்து அனுப்பப்பட்டது:-** ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை நகர பிரிவு -I, காவல் ஆய்வாளர் P.I.ஜோஸ்லீன் மேரி ஆகிய நான் இன்று 22.06.2026-ம் தேதி 10.10 மணியளவில், மேற்சொன்ன அலுவலகத்தில் பணியில் இருந்த போது சென்னை, குன்றத்தூர், தேவகி நகர், அருள்செல்வன் தெரு, எண் 104B என்ற முகவரியில் வசிக்கும் திரு.பாலசுப்பிரமணயன், த/பெ. பரமசிவன் என்வர் சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை அலுவலகம் வந்து, சென்னை நகர பிரிவு -I -ன் காவல் ஆய்வாளர் ஆகிய என்னிடம் தமிழில் தட்டச்சு செய்யப்பட்ட எழுத்து மூலமாக புகார் மனுவை கொடுத்தார். அவர் கொடுத்த புகார் மனுவின் விவரம் பின்வருமாறு **அனுப்புநர்**, திரு. பாலசுப்பிரமணியன், ஆ/வயது 53/2026, த/பெ. பரமசிவன், எண் 104 B, அருள்செல்வன் தெரு, தேவகிநகர், குன்றத்தூர், சென்னை -600 069. **பெறுநர்**, உயர்திரு. காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, சென்னை நகர பிரிவு -I, ஆலந்தூர், சென்னை-16. அம்மா, நான் மேற்கண்ட விலாசத்தில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் 1991-ம் ஆண்டு தமிழ்நாடு மின்சார வாரியத்தில் ஒப்பந்த ஊழியராக பணிபுரிந்து வந்தேன். பின்னர் 1999-ம் ஆண்டு தமிழ்நாடு மின்சார வாரியத்தில் நிரந்தர அரசு ஊழியராக Helper -ஆக பணியமர்த்தப்பட்டு பணிபுரிந்து வந்தேன். பின்னர் தொடர்ச்சியாக கல்வி தகுதி அடிப்படையில் கடந்த 2011-ஆம் ஆண்டு உதவி பொறியாளராக பதவி உயர்வு பெற்று பணிபுரிந்து வந்தேன். கடந்த 2021 -ஆம் ஆண்டு முதல் உதவி பொறியாளராக சென்னை, பெசன்ட் நகர் மின்வாரிய அலுவலகத்தில் பணிபுரிந்து வந்த போது, சென்னை, துரைபாக்கம், பழைய பல்லாவரம் சாலை, ரேடியல் மாண்டிரியன் என்ற முகவரியை சேர்ந்த திரு.கிருஷ்ணகுமார் என்பவர் கடந்த 19.09.2023 -ம் ஆண்டு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறையில் என் மீது கொடுத்த புகாரின் பேரில், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை காவல் ஆய்வாளர் அவர்கள் குற்ற எண் 03/AC/2023/CC-V -ன்படி என் மீது வழக்கு பதிவு செய்து, பொறி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, கடந்த 04.10.2023 -ம் தேதியன்று பிணையில் விடுவிக்கப்பட்டு

இருந்த நிலையில், பணியிடை நீக்கம் செய்யப்பட்டு இருந்தேன். பின்னர் நான் மேற்பார்வை பொறியாளர், சென்னை மின்பகிர்மான வட்டம், அடையாறு அவர்களை அணுகி என்னை பணிக்கு எடுத்து கொள்ளும்படி வேண்டுகோள் கடிதம் கொடுத்ததின் பேரில், மேற்படி மேற்பார்வை பொறியாளர், சென்னை மின்பகிர்மான வட்டம், அடையாறு அவர்கள், தலைமை பொறியாளர் (Personnel) தமிழ்நாடு மின்சார வாரியம், சென்னை அவர்களுக்கு பரிந்துரை கடிதம் அனுப்பியதின் பேரில், நான் இது சம்மந்தமான அடிக்கடி எங்கள் தலைமையத்திலுள்ள தலைமை பொறியாளா (Personnel) அவர்களின் அலுவலகத்திற்கு சென்று வருவேன். அப்போது எனது Revocation order சம்மந்தமான ஓழுங்கு நடவடிக்கை பிரிவில் பணிபுரியும உதவியாளர் திரு.பாலாஜி அவர்கள் எனக்கு அறிமுகமானார். நான் அடிக்கடி அவரிடம் தலைமை அலுவலகத்திற்கு செல்ல முடியாத காரணத்தினால் மேற்கண்ட பிரிவில் பணிபுரியும் திரு.பாலாஜி அவர்களிடம் Revocation கடித நிலை பற்றி கேட்டு தெரிந்து கொள்வேன். தலைமை பொறியாளர் (Personnel) அவர்கள் அளித்த உத்தரவின் பேரில் மேற்பார்வை பொறியாளர், சென்னை மின் பகிர்மான வட்டம், அடையாறு அவர்களின் அலுவலக கடித எண் Memo No.04545/Adm.II/A.1/F.Revoke/2026, dated: 12.06.2026 -ன்படி பணிக்கு மீண்டும் எடுத்து கொள்ள உதவி செயற்பொறியாளர், விநியோகம், அடையாறு அவர்கள் 15.06.2026 -ம் தேதியன்று Revocation Order-ஐ எனக்கு வழங்கினார். பின்னர் மறுநாள் 16.06.2026 -ம் தேதியன்று எங்களது தலைமை அலுவலகத்திற்கு சென்று Chief Engineer (Personnel) அவர்களின் நேர்முக உதவியாளர் அவர்களிடம் எனக்கு சென்னை மாநரகத்திலிலேயே பணியிடம் ஒதுக்க கோரி மனு கொடுத்துவிட்டு அலுவலகத்தைவிட்டு திரும்பும் போது, திரு.பாலாஜி, உதவியாளர் அவர்கள் என்னை நேரில் சந்தித்தார். அந்த சந்திப்பின் போது, நான் எனக்கான பணியிடம் சென்னையில் ஒதுக்க கோரி மனு அளித்த விவரத்தை கூறிய போது, அவர் பணிநியமனம் சம்மந்தமாக திருமதி.முத்துலெட்சுமி, Assistant Personnel officer (APO) அவர்கள் தான் ஒதுக்கி, அந்த கோப்பினை மேல்நடவடிக்கைக்காக Chief Engineer (Personnel) அவர்களுக்கு சமர்ப்பிப்பார் என்று கூறி, மேலும் தங்களுக்கு சென்னையிலேயே பணி

நியமனம் வேண்டுமென்றால் தாங்கள் மேற்படி திருமதி. முத்துலெட்சுமி, Assistant Personnel Officer அவர்களுக்கு ரூ.1,50,000/- வரை கையூட்டாக கொடுக்க வேண்டும் என்று கூறினார். பின்னர் நான் தற்சமயம் பணியிடை நீக்கத்தில் இருந்து வருகிறேன். என்னால் அவ்வளவு தொகை கொடுக்க இயலாது, நீங்கள் மேற்படி திருமதி.முத்துலெட்சுமி, Assistant Personnel officer (APO) அவர்களை எனக்கு அறிமுகப்படுத்தி வையுங்கள், நானே எனக்கான பணிநியமனத்தை கேட்டு பார்க்கிறேன் என்று திரு.பாலாஜி உதவியாளரிடம் கூறினேன். உடனே பாலாஜி சரி நான் அறிமுகப்படுத்தி வைக்கிறேன் என்று ஒப்புகொண்டார். நானும் பாலாஜி அவர்கள் கூறியபடியே மறுநாள் 17.06.2026 -ம் தேதியன்று எனது தலைமை அலுவலகத்தில் திரு.பாலாஜி பணிபுரியும் ஒழுங்கு நடவடிக்கை பிரிவிற்கு சென்று நேரில் சந்தித்தேன். அப்போது திரு.பாலாஜி அவர்கள் Assistant Personnel officer (APO) திருமதி.முத்துலெட்சுமி அவர்கள் இது சம்மந்தமாக யாரையும் பார்க்க மாட்டேன் என்றும், மேலும் ரூ.1,30,000/- க்கு கீழ் குறைத்து கொள்ள முடியாது, நான் மேலதிகாரிகளுக்கெல்லாம் கொடுக்க வேண்டும் என்று கூறிவிட்டார். பின்னர் நான் மீண்டும் 18.06.2026 -ம் தேதியன்று திரு.பாலாஜி அவர்களை தொடர்பு கொண்டு என்னால் அவ்வளவு தொகை கொடுக்க முடியாது, அதனால் கொஞ்சம் குறைத்து கொள்ளுங்கள் என்று கூறியதற்கு, அவர் வேண்டுமென்றால் முதல் தவணையாக ரூ.50,000/-த்தை கொடுங்கள், பின்னர் Transfer and Posting Order வந்த பிறகு மீத தொகையை கொடுங்கள் என்று கறாராக கூறிவிட்டார். எனக்கு திரு.பாலாஜி, உதவியாளர், தமிழ்நாடு மின்சார வாரியம் அவர்கள் பணிநியமனம் பெற்று தர லஞ்சமாக கேட்ட ரூ.50,000/- பணத்தை கொடுக்க விருப்பமில்லை. ஆகையால் என்னிடம் பணம் லஞ்சமாக கேட்ட திரு.பாலாஜி, உதவியாளர், தமிழ்நாடு மின்சார வாரியம் அவர்கள் என்பவர் மீது தக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டு கொள்கிறேன். எனக்கு அத்தியாவசிய பணிகள் இருந்ததால் அவற்றை முடித்து விட்டு இன்று 22.06.2026-ந் தேதி காலை 9 மணிக்கு புகார் மனுவை கொடுக்கிறேன். இந்த புகார் மனுவுடன் என்னிடம் லஞ்ச பணம் கேட்டு வற்புறுத்திய திரு.பாலாஜி என்பவரும், நானும் எனது செல்போனில் பேசிய உரையாடல் (Voice Recorder) பதிவுகளை HP Pen drive -8GB

மற்றும் Revocation Order-ன் நகலினையும் இத்துடன் இணைத்துள்ளேன். இப்படிக்கு

P.பாலசுப்பிரமணியன் (Sd.XXXX) 22.06.2026.

Sir,

The above complaint was received on 22.06.2026 at 10.10 hrs along with Pen Drive containing relevant records. After obtaining concurrence from the higher officials, conducting discreet verification and obtaining the necessary permission, a case was registered in V&AC, CC-I Cr.No.02/2026/AC/CC-I u/s 7 of Prevention of Corruption (Amendment) Act, 2018 on 22.06.2026 at 10.50hrs and was taken up for investigation. I hereby submit the original complaint, F.I.R and the Pen Drive received from the complainant before the Hon'ble Principal Sessions and City Civil Court Judge, Chennai. A copy of the F.I.R is also being forwarded to the concerned officers. (Sd XXXX) (P.I.JOSLINE MARY, INSPECTOR OF POLICE, V&AC, CC-I, CHENNAI-16)

22.06.2026
[P.I. JOSLINE MARY]

INSPECTOR OF POLICE,
Vigilance and Anti-Corruption
Chennai City - 1
Alandur, Chennai - 16.